**தலைப்பு 234 – உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 234 - உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி திணைக்களத்தின் பதிவாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள

கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராமை | 2.1 |
| | | 2. | நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை. | 2.4(அ) |
| | | 3. | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | 2.4(ஆ) |
| | | 4. | பதவியணியினரை பயிற்றுவிப்பதிலான குறைபாடுகள் | 2.8 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்களை நடாத்துவதிலான குறைபாடுகள் | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கின் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடாமை | 2.5(அ) |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | | |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாதல் | 2.2 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் | வங்கியிலிடப்பட்டிராத பணம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிராமை. | 2.6(ஆ) |

பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும்

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 திட்டமிடல்

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றல்

---

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் ரூபா 10.16 மில்லியன் கூட்டுப்பெறுமதியான 05 கணனி இயந்திரங்கள் மற்றும் 25 மடிக்கணனிகள் 05 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டிக்கமைய விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3 மற்றும் 6.3.6 வழிகாட்டிக்களுக்கமைய சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் பெறுகைகள் தொடர்பான விலைக்கேள்வி அனைவர் முன்னிலையிலும் திறக்கப்பட்டு உரிய மாதிரிக்கமைய அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.11.1 வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வி மதிப்பீடு செய்தல் நிறைவடைந்தவுடன் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விலைக்கேள்வி மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அனைத்து சான்றுபடுத்தல் ஆவணங்களுடன் அந்த அறிக்கை

பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டிக்கு முரணாக முறையாக ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(உ) கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணனி மற்றும் உதிர்ப்பாகங்கள் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.3 வழிகாட்டிக்கமைய மிளாய்வாண்டின் போது கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்துள்ள பொருட்கள் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு, பெறுகைகள் கால அட்டவணைக்கமைய செயற்பட்டு கொள்வனவு செய்ய வேண்டியதாக இருந்தது. எனினும் ரூபா 4.95 மில்லியன் பெறுமதியான 25 மடி கணனிகளை கொள்வனவு செய்யும் போது அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தல்

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருந்தது. எனினும், அந்த பதிவேடுகளில் திணைக்களத்தின் அனைத்து சொத்துக்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க கொம்பிடிரேலர் ஜெனரால் அலுவலகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ப்டிரேலர் ஜெனாரலுக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த தகவல்கள் நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன்

இணங்கவில்லை. அவ்வாறே 10 வாகனங்கள், 88 இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் 2,382 அலுவலக உபகரணம் மற்றும் தளபாடங்களுக்குமாக கொம்ப்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2016** | மீண்டுவருபவை | 152.9 | 143.1 | 9.8 | 6.41 |
| | மூலதனம் | 9.4 | 4.6 | 4.8 | 51.06 |
| | **மொத்தம்** | **162.3** | **147.7** | **14.6** | **9.00** |
| **2017** | மீண்டுவருபவை | 160.9 | 147.8 | 13.1 | 8.14 |
| | மூலதனம் | 11.7 | 9.4 | 2.3 | 19.66 |
| | **மொத்தம்** | **172.6** | **157.2** | **15.4** | **8.92** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை

02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 65,000 பெறுமதியான மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எவ்வித பயன்பாடுமில்லாமையால் அந்த மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

10 செலவின மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த நிதியேற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட பின்னரான சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 21 சதவீதம் முதல் 89 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

**(இ) நிதியேற்பாடுகளை மிகைத்து பொறுப்புகளை ஏற்படுத்தல்**

04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் பயன்படுத்திய பின்னரான சேமிப்பினை மிகைத்து ரூபா 317,111 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 16.00 | 15.98 | 10.00 | 12.32 | 40.00 | 36.80 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன்

மீதிகள் நீங்கலாக ரூபா 138,312 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 06 மாதங்கள் முதல் 05 வருடங்களான காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் புத்தகங்களுக்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் திறைசேரி புத்தகங்களுக்கமைய அந்த மீதிகளுக்கிடையே ரூபா 65,245 தொகையான வேறுபாடொன்று நிலவியது. அந்த மீதியானது 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் இணக்கம் செய்யப்பட்டு திருத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.6 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி நடைமுறைக் கணக்கின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்டிருந்த போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலாவதியான ரூபா 5,000 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இணக்கக்கூற்றில் காணப்படுகின்ற ஒரு வருடத்திலும் அதிகமாக காலமாக வங்கியிலிடப்படாத ரூபா 48,978 தொகை தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பற்றாக்குறை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் திணைக்களம் தவறியிருந்தது.

## 2.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

-------------------------------------------------------------------------------

நீதிமன்றங்கள் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/2009(1)(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009/(1)(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய ஆண்டொன்றினுள் காலாண்டிற்கு ஒரு தடவை

படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் 04 கூட்டத்தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 02 கூட்டத்தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

--------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக உயர் நீதிமன்றத்தின் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 85.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நிர்வாகத்திற்காக ரூபா 50.89 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

**உயர் நீதிமன்ற நிர்வாகம்**

--------------------------------------------

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 05 | 06 | 01 | 02 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 13 | 10 | 05 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 111 | 75 | 42 | 06 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 103 | 89 | 18 | 04 |
| (v) | அமைய / ஒப்பந்தம் | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **232** | **182** | **66** | **16** |

**மேன்முறையீட்டு நீதிமன்ற நிர்வாகம்**

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 03 | 01 | 02 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 18 | 09 | 09 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 49 | 54 | - | 05 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 45 | 43 | 02 | - |
| | **மொத்தம்** | **115** | **107** | **13** | **05** |
| | **கூட்டு மொத்தம்** | **347** | **289** | **79** | **21** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் பதவியணியின் 181 உத்தியோகத்தர்களில் 138 பேருக்கு எவ்வித பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.